...முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சி...
(1982)

ஸ்ரீசண்முகப் பெருமானைத்துணை.

குன்றுதோறுடுஞ் சண்முகப் பெருமான்
பேரிற் பாடிய

# நிரோட்டயமகவந்தாதி

மூலமும்—உரையும்,

திருப்பரங்கிரிக் குமரன்பேரிற் பாடிய

# தகார வண்ணமும்.

இவை

இராமநாதபுரம்ஜில்லா சிவகங்கை சமஸ்தானத்தைச்சேர்ந்த
வேம்பத்தூர்ச் சங்க வித்துவான்களிலொருவராகிய
சாமாவைய ரென்ற ஆண்டி ஐயரவர்கள் குமாரரும்
திருவாவடுதுறை யாதீனத்தில் வாசித்துத் தேர்ந்தவருமாகிய
சௌந்தர பாரதியவர்களால்

திருநெல்வேலியிலுள்ள வேம்பத்தூர் மடாதிபதிகளாகிய
பிரமஸ்ரீ
வாமதேவ சுப்பிரமணிய சிவாசாரியரவர்கள்
வேண்டுகோளின்படியியற்றப்பெற்று

கரூர், பொன்மயில்பிள்ளை யென்ற
வாலசுப்பிரமணியபிள்ளையவர்களின்
திரவிய சகாயத்தால்

மதுரை:
மீனலோசனி அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப் பெற்றன.

[காபிரைட்.] ஆங்கிரஸஞு 1932. [விலை அணா 2.

# மதிப்புரை.

## உத்தமதானபுரம் மஹாமஹோபாத்தியாய பிரமஸ்ரீ வே. சாமிநாதையரவர்களெழுதியது.

பாண்டிநாட்டிலுள்ள வேம்பத்தூர்த் தமிழ்ச்சங்கத்தவர்களுள் ஸ்ரீ கவிராஜபண்டிதருடைய பரம்பரையினரும் நூற்றுக்கணக்கான வெத்தனையோ வரியசெய்யுட்களை விரைவிலியற்றிக் கேட்பவர்களுக்கு மிக்கவிம்மிதத்தை யுண்டுபண்ணி வருபவர்களுமாகிய பிரமஸ்ரீ சௌந்தரபாரதிகள் திருநெல்வேலியிலுள்ள வேம்பத்தூர் மடாதிபதிகளாகிய ஸ்ரீமத் வாமதேவ சுப்பிரமணிய சிவாசாரியாவர்களுடைய விருப்பத்தின்படி குன்றுதொறுடும் ஸ்ரீ சண்முகப்பெருமான் மீது இயற்றிய நிரோட்ட யமகவந்தாதிச் செய்யுட்களையும் அவற்றின் பொருள்களையுங் கேட்டு மிகவின்புற்றேன். செய்யுட்களிலுள்ள யமகங்கள் மிக்க வின்பத்தை விளைவிக்கின்றன. இந்நூலைக்கேட்கும் தமிழபிமானிகள் மிக வின்புற்றிவர்களை யாதரித்து, ஊக்கமளிப்பார்களென்றும் நம்புகிறேன். இதனை யாக்குவித்தோர்களை நினைக்கும்பொழுது முன்னமே திருச்செந்தில் நிரோட்ட யமகவந்தாதியை வெளிப்படும்படி செய்த நெல்லைமாநகரின் தமிழ்ப்பெருமை நன்கு வெளியாகின்றது.

இங்ஙனம்,

**வே. சாமிநாதையர்,**

மீனாக்ஷிகாலேஜ், சிதம்பரம்.

24—1—1925.

உ

# சிறப்புப் பாயிரம்.

வேம்பத்தூர் நிமிஷகவிச் சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள்
குமாரரும், மதுரைக்கல்லூரி யுயர்தரக்கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியருமாகிய

## பி. பாஸ்கரையர் பாடியது

நிலைமண்டிலவாசிரியப்பா.

மரவளம் பெருகக் காவளந் திகழும்
பாவளம் மிக்கவேம் பத்தூர் வாழும்
மிகைதரு பூர்வ சிகையா ரந்தணர்
வகைமர பினிலே தகைசேர் தனஞ்சய
கோத்திரத் தார்திட காத்திரம் பெற்றோன்
பாத்திரங் காண்டிடச் சாத்திரங் கற்றோன்
எண்டிசை புகழுந் தண்டிகைப் புலவர்
மண்டிய குழுவிற் றண்டியாய் வந்தோன்
நாமா தாணிகர் சாமா வையன்
தாமா தாவிற் றந்தசு புத்திரன்
மறையாக் கீர்த்தித் துறையா வடுதுறை
யிறையா ரிடத்துமங் குறைந்தா ரிடத்திலு
மிலக்கிய விலக்கணத் தலபுரா ணங்கள்
சிலநாட் டங்கி நலமாத் தேர்ந்தோன்
கட்டெழுத் தாணியர்க் கிட்டபா முதலாம்
எட்டவ தான மட்டிற் செய்தோன்
வண்ணப் புவியில் வண்ணப் புலியென
எண்ணப் பலவகை வண்ண மிசைத்தோன்
பதியர ஊைப்பணி யாற்கர சேது
பதிபாற் பதினெண் புராணப் பரிக்ஷை
தேறிப் பரிசெலாம் வாரிக் கொண்டோன்
பாரிற் புலவரி யாரிப் படிவிரை
வாகக் கவிசொல் வதிலெனப் புகழ்பல
வாகக் கொண்ட வாகன் சவுந்தர
பாரதி பூசைசெய் வோரதி யாகி

# சிறப்புப்பாயிரம்.

நெல்வே லிப்பதி மல்குளை வாட்கு
நல்லைந் தெழுத்துச் சொல்குரு வாயவன்
மன்னுவேம் பத்தூர் மடத்துவிற் றிருக்கும்
பொன்னுசன் பணிதலைத் தூன்னுதூர் வாசன்
றன்னடி போற்று மன்புமிக் குள்ளோன்
பன்னரு மிருமொழிச் சொன்னயங் காண்போன்
அம்பிகை பாதம் நம்பு முளத்தன்
நிம்பைத் தலத்தார் தம்வழி வந்தோன்
படாமுதற் பொற்கலன் விடாதருள் கரத்தன்
மடாதி பதியாம் வரம தேவ
சுப்பிர மணியெனச் சொல்சிவா சாரியன்
விப்பிரர் குலமணி யிப்புவி யதனி
லென்று மிருக்கவும் நன்று மடுக்கவுங்
குன்றுதொ றாடுங் குணத்தன் ஞான
விரோசனன் தேவர் சிரோமணி யாய
பரோப காரப் புரோகன் சண்முக
னேமத் தாட்கு நிரோட்ட யமக
நாமத்தந் தாதி நவில்கெனச் செப்பி
வேண்ட வன்னோர் விரைவிற் பாடி
யாண்டலைக் கொடியோற் கணிந்தவிந் நூலை
ஆனூர் சிவன்வாழ் கானூர் தன்னில்
வானூர் தருநதி தானூர் மரபினர்
பஞ்சாக் கரத்தை யெஞ்சா திசைக்கும்
நெஞ்சார் கொடையி லஞ்சார் தன்மைத்
தெங்சுப விலாசச் சின்னச் சாமி
யென்றெல் லோரும் பன்னும் பெயரியச்
சமய முத்துப் பிள்ளை தனையன்
சமதியாங் குவளைத் தாரணி மார்பன்
பொன்வளர் பரங்கிரிப் புண்ணியர் தொழும்பன்
பொன்மயில் பிள்ளை யென்று புகலும்
வால சுப்பிர மணிய பிள்ளை
சாலச் செம்பொன் றந்தச் சேற்றினன்
சித்தி தரும்புகழ்ப் புத்திரர்ப் பேறுடும்
இத்தரை வாழி நித்தியந் தானே.

உ

# சாற்றுக்கவிகள்.

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவானும் மதுரைத் தமிழ்ச்சங்கம்
நூற்பரிசோதகருமான

## மு.ரா. சுப்பிரமணியக்கவிராயர் அவர்கள் இயற்றியவை,

சீர்மேவுந் தென்மதுரை நகர்மருவும் நாதன்முனந்
தெளிவாய்ச் செய்த
பேர்மேவு செந்தமிழி லக்கணந்தேர்ந் தனுதினமும்
பேணிக் கூறும்
பார்மேவுங் கவித்திறமை மிக்குடையா னிவன்கவியைப்
பார்க்குந் தோறும்
கார்மேவு தெள்ளமுதாஞ் சவுந்தரபா ரதியென்று
நவிலும் பேரோன்

சந்தருக்கு மணிநாதர் நன்மருக ரெனமெச்சுந்
தகைமை வாய்ந்த
கந்தருக்குள் ளுவகையுற விதழகலந் தாதிமனங்
கசிந்து சொன்னான்
இந்தருக்கு வசனம்போற் சொற்பொருளா ரந்தாதி
யிதனை யன்பாற்
பந்தருக்கு மெழிற்குயவள் ளியின்கணவ னருளுண்டாம்
படிப்போ ருக்கே.

---

திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீ வைகுண்டம் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர் வண்டானம்

## நல்லகுற்றாலம்பிள்ளையவர்கள் இயற்றியவை.

வழிவழி வழியாச் செந்தமிழ்ப் புலமை
வாய்ந்துல கேத்துவேம் பத்தூர்
தழுவிய மறையோர் தம்மின்மிக் கோனாஞ்
சவுந்தர பாரதிப் பெரியோன்
விழுமிய மலைக டொறுந்தொறு மாடன்
மேயசெவ் வேடிரு வடிக்கண்
வழுவினி ரோட்ட யமகவந் தாதி
மாத்தொடை புனைந்தனன் மன்னே.

திருவார்தென் னெல்லையின்ம டாலயத்தி லனுதினமுஞ்
சிறப்பாய் மேவித்
தெருளார்மெய்ச் சைவமெனும் பயிர்வளரச் செகதலத்திற்
செய்து காத்து
வருவரம தேவசுப்ர மண்யசிவா சார்யமுனி
மலைதொ றுடும்
பெருமான்சண் முகநிரோட்ட யமகவந்தா தியைச்சொலெனப்
பேசி னானே.

அப்பிரபந் தத்தையவன் றிருமுன்ன ராயிர நூற்
றுறு மாண்டிற்
செப்பிடப ரவியினிரு பான்மூன்றுந் தெய்தியெனுந்
திருநன் னாளில்
விப்பிரரும் விற்பனரும் சூழ்ந்துமகிழ்ந் தேத்தநிதம்
வேய்பத் தூர்வாழ்
வைப்பனையான் சவுந்தரபா ரதிநவின்று பரிசுபெற்று
மகிழ்ந்தான் மன்னே.

---

சிதம்பரம் ஸ்ரீமீனாக்ஷிகாலேஜ் தமிழ்ப்பண்டிதர்

## சர்க்கரை இராமசாமிப்புலவர் அவர்கள் இயற்றியது.

இத்தலத் தெவரு மியற்றுதற் கரிதென்
றியற்றமிழ் வாணர்கொண் டாடச்
சித்திர மாதி கவியரை னொடியிற்
செப்புவோ னுமைபத வாரி
சத்தினைப் பரவு நிம்பைவாழ் மறையோன் சவுந்தர
பாரதி நிரோட்டப்
புத்தமு தந்தா தித்தொடை முருகன் பொற்புயத்
தணிந்தனன் மன்னோ.

---

திருவாவடுதுறைஆதீனம் சுப்பிரமணியஒதுவார்மூர்த்தியவர்கள்
குமாரர்

## பொன்னோதுவார்மூர்த்தியவர்கள்இயற்றியது.

கட்டளைக்கலித்துறை.

ஈட்டங் கொழுஞ்சிக ரக்குன்று தோறு மிருந்தருள்வேள்
தாட்டுணை மே னிம்பைச் சௌந்தர பாரதி தானுரைத்தான்
பாட்டின் சுவையறி பாவலர் யாருமன் பாய்ப்புகழ
வேட்டமொட் டாதசொல் லந்தாதி யொன்றை யொளிபெறவே.

---

தேவகோட்டை வன்றொண்டரவர்களின் மாணாக்கரிலொருவராகிய
காரைக்குடி ராம. சோ. சோக்கலிங்கஞ் செட்டியாரவர்கள்
இயற்றியவை.

மாமருந்தா யுடற்குறுதி வழங்குதலி னுயிர்க்கமுதும்
வழங்கும் வாய்மைத்
தேமருந்தண் ணிம்பநகர்த் திருமறையோர் குலக்கவிஞர்
செம்ம றெய்வப்
பாமருந்தா யறிஞரெலாம் பன்முறையுண் டுளம்நிறையப்
பருகச் செய்வோன்
காமருந்தண் சவுந்தரபா ரதிராமன் திசைவிளக்குங்
கவிவல் லோனே.

உவரிவிடத் துடன்பிறந்த துறுமழற்கு டுண்டதளி
யுண்ட மிச்சிற்
றிவியமுது கண்டுபொன்றேன் முதலவென் றொதுக்கிச்
செந்த மிழ்த்தீஞ்
சுவையமுதா யனவாதர் துய்த்தலின்வாய் மூடாத
தோற்றங் காட்டிக்
கவிஞர்புகழ் கந்தனிரோட் டகயமக வந்தாதி
கழறி னானே.

---

திருநெல்வேலிஜில்லா வல்லநாடு கரு. மூத்தையரவர்கள் குமாரர்
சங்கரசுப்பாசாஸ்திரிகள் இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

பண்ணார் மலர்ப்பொழி னிம்பைச் சவுந்தர பாரதியார்
எண்ணார் புரமழித் தோனருள் சேய்பன் னிருகரனும்
விண்ணார் தருங்குன்று தோரூடற் சண்முகன் மேற்புகன்ற
தண்ணார் நிரோட்ட யமகவந் தாதிபோற் சாற்றரிதே.

---

இந்நூலாசிரியரின் மாணாக்கரும் சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள்
மருகருமாகிய

கோவிந்தையரவர்கள் இயற்றியது.

சீர்கொண் ணிரோட்ட யமகவந் தாதியைச் செந்தமிழாற் [ற்
கார்கொண் மலர்ப்பொழிற் குன்றுதோ ரூடுமெங் கந்தனின்மே
பார்கொ ளிசைநிம்பை வாழுஞ் சவுந்தர பாரதியார்
நார்கொள் ளமுதிற் புகன்றார் செவிக்கின்ப நண்ணிடவே.

---

வேம்பத்தூர் நிமிஷக்கவிச் சிலேடைப்புலி பிச்சுவையரவர்கள்
குமாரரும் மதுரைக்கல்லூரி யுயர்தரக்கலாசாலைத்
தலைமைத் தமிழாசிரியருமாகிய

பி. பாஸ்கரையர் பாடியது.

வெண்பா.

என்று மருள்புரித லேவேலை யாக்கொண்ட
குன்றுதொ ரூடுங் குமரர்க்கிங்—கென்றுமொன்
பார்த்துப் பணிசவுந்தர பாரதியா ரன்புவைத்துச்
சேர்த்தார் நிரோட்டவந்தா தி.

உ

ஸ்ரீ சண்முகப்பெருமான் துணை.

குன்றுதோறுடுஞ் சண்முகப்பெருமான் பேரிற் பாடிய

# நிரோட்டயமகவந்தாதி

## மூலமும்-உரையும்.

---

### கணபதி துதி.

வெண்பா.

சீர்மருவுந் தேவர் தினந்தொறும்வந் தேபணியச்
சார்குன்று தோறுடுஞ் சண்முகன்மே—லேர்பெறுந
யந்தியனி ரோட்ட யமகவந் தாதிசொலக்
கந்தனுக்கு முன்னுதித்தோன் காப்பு.

### வீரைக்கவிராஜ பண்டிதர் துதி.

முன்னிற்கும் வேற்சண் முகப்பெருமான் மீதிலிதழ்
துன்னுதலில் லந்தாதி சொல்லவே—மின்னுமணித்
தெண்டிரைஞா லம்பரவுந் தெய்வக் கவிராஜ
பண்டிதர்பொற் பாரும் பதம்.

### நூல்.

கட்டளைக்கலித்துறை.

இசைத்தந்தி யானனத் தானிளை யாய்சே ணிடத்தினர்தண்
ணிசைத்தந்தி யானகி யாழ்க்கைய ராதிய ரேத்திடத்தா
ரிசைத்தந்தி யானரே ரத்தினின் றுடிசே யேயளியென்
றிசைத்தந்தி யானஞ்செய் தாலெய்த லாங்கதி யித்தினத்தே.

(இதன் பொருள்) இசைத்தந்தி யானனத் தானிளையாய் - மெய்க்கீர்த்தி வாய்ந்த ஆனைமுகக்கடவுளி னிளையா யெனவும், சேணிடத்தினர் - விண்ணுலகத்திலுள்ள விந்திராதி தேவரும், தண்ணிசைத் தந்தியானகியாழ்க்கையராதியர் - குளிர்ச்சிபொருந்திய இராகத்தைத் தாங்கின்ற நரம்பினால் விளங்கும் வீணையையவாசிக்கின்ற நாரதாதி முனிவரும், ஏத்திட - துதிக்க, தாரிசைத்

தந்தியான நேரத்தினின்றுடிசேயே - கச்சைகட்டி மாலைப்பொழுதிற் கனக சபையின் கண் ஆனந்தநடனம் புரிகின்ற பரமசிவனுடைய திருக்குமாரனாகிய முருகக்கடவுளே எனவும், இசைத்து-கூறி, அளியென்றநந் தியானஞ்செய்தா லெய்தலாங்கதி யித்தினத்தே - காப்பாற்றியருளவேண்டுமென்று பஞ்சேந்திரி யங்களையும் ஒழுங்காயடக்கி மனத்திலெண்ணினு லிப்பகலிலே இம்மை மறு மைக்கு வேண்டியனவற்றை எளிதாயடையலாம் என்பதாம். ஏ-ஈற்றசை.

தினந்தினங் காத கரைக்கா யயிலணி செங்கையதீ
தினந்தினங் காதணிந் தார்தனை யாநெலைச் சேர்ந்திறங்கித்
தினந்தினங் காதரிக் காதடங் காரனர் செய்தலைத்த
தினந்தினங் காதலித் தாளென்றி லேகார்ச் சித்தனரே.

(இ-ள்.) இலேகர் - தேவர்கள், தினந்தினங் காதகரைக்காய் அயிலணி செங்கைய - அனுதினமு முயிர்வதைசெய்கின்ற வசுரர்களைச் சங்காரஞ்செய் யும் வேற்படையைத் தரித்த சிவந்த கையையுடையவனே, தீதில்நந்தினங் காதணிந்தார் தனையா - குற்றமற்ற சங்குகளைச் செவியினிடத்துக் குழையாக வணிந்து கொண்டவராகிய சிவபெருமானின் குமரா! நெலைச் சேர்ந்திறங்கித் தின் அந்தின் - அந்துகள் கூட்டமாக விறங்கி நெல்லை யுண்கின்ற தன்மை யைப் போல, அங்கு ஆதரிக்காதடங்காரனர் செய்தலைத்ததில் நந்தினம் - அவ்விடத்தில் இரக்கமில்லாது சத்துருக்கள் துன்பத்தைச் செய்து வருத்தும் தன்மையினாலே கெடுதியை யடைந்தோம், காதலித்தா ளென்றர்ச்சித்த னரே - ஆகையால் விருப்பமுடன் காப்பாற்றுவாயென்று பொன்மயமாகிய மலரினால்அர்ச்சனை செய்தார்கள் என்பதாம். அங்ஙனம் அர்ச்சனை செய்ததி னால் நன்மையடைந்தார்கள்; நாமும் அர்ச்சனைசெய்தால் நன்மையடையலாம். (இதுஎச்சக் குறிப்பு.) (௨)

சித்தத்தி யாகஞ்செ யந்தணர்க் காய்நடித் தேயறக்கர்ச்
சித்தத்தி யாகஞ் செயிர்த்தார் களிக்கச் சிரித்தகநச்
சித்தத்தி யாகஞ் செழிக்கநின் றாடிளஞ் சேயனெநற்
சித்தத்தி யாகஞ் செறிந்தா யெனிற்கையாஞ் சேர்கதியே.

(இ-ள்.) சித்தத்தியாகஞ்செ யந்தணர்க்காய் நடித்தே - தங்களுடைய இருதயத்தைஇருப்பிடமாகச்செய்தபதஞ்சலிவியாக்ரபாதராகியமுனிவர்களின் பொருட்டுக் கனகசபையினிடத்திற் பரமானந்தத் தாண்டவம் புரிந்து, அறக் கர்ச் சித்தத்தியாகஞ் செயிர்த்தார் - தன்னை மதியாமல் தக்கனாற் செய்யப் பட்ட பாவத்துக்கேதுவாகிய யாகத்தை மிகச் சினந்தழித்தவரான பரமசிவன்,

களிக்கச் சிரித்தகாச் சித்தத்தியாகஞ் செழிக்க நின்றாடிஇளஞ்சேயனே - மன மகிழ மனமுறுவலித்து விரும்பி ஏறி மார்பினிடத்துப் புளகாங்கிதமுற நின்று விளையாடுகின்ற முருகனே எனவும், நற்சித்தத்தியாகஞ் செறிந்தாயெனில் - நல்ல விளையாடல் புரிகின்ற தெய்வயானையின் திருமேனி மகிழும்படி செய் இன்றவனே எனவும், எளில் - கூறில், கையாஞ் சேர்கதியே - இகபரத்தில் அடையக்கூடிய நலம் கைவசமாமென்பதாம். சேயனே-எனற்பாலது சேய ஞெ என்றது குறுக்கல் விகாரம். (ங)

ஏகனத் தானத் தயனுதி யிந்திரற் கீசனிசைக்
கேகனத் தானத் தரையா ளிராகன் னியையிடையி
லேகனத் தானத்த னீந்தகாங் கேயன் னிலையிலா
லேகனத் தானத்தங் கீண்டா னெனையாண் டிடத்தக்கனே.

(இ-ள்.) ஏகனத் தானத் தயனுதி யிந்திரற்கீசன்-அதிவிரைவாய்ச் செல் லாநின்ற அன்னவாகனத்தையுடைய பிரமதேவனுக்கும் முதன்மையுள்ள இந் திரனுக்கும் தலைவனும், இசைக்குஏகன் - கீர்த்தியினால் ஒப்பற்றவனும், அத் தானத் தரையாளிராகன் - அப்பொன்னுலகிலுள்ள இமையவர்களைக் காப் பாற்றுகின்ற அன்புள்ளவனும், இயையிடையி லேகனத்தானத்தனீந்த காங் கேயன் - வராகவடிவமெடுத்த திருமாலின் வடிவத்திற் பாதிகொண்ட பரம சிவன் தந்தகாங்கேயனும், இலையயிலாலே கனத்தானத்தங் கீண்டான் - தகட் டின் வடிவமாகிய ஞானசத்தியினாலே கிரௌஞ்ச மலையின்வடிவமுள்ள பகைவ னை தாரகாசுரனுடைய கைகளையரிந்து சம்மரித்தவனுமாகிய முருகக்கடவுள், எனை யாண்டிடத் தக்கனே - எளியேனாகிய என்னை ஆளும் தகுதியுடையவன் ஆவான் என்பதாம். (ச)

இடத்தா ரணித்தடந் தேரேறி யெய்தி யெயிலெரித்தா
ரிடத்தா ரணிதனத் தாடயை யாலீ யிளைஞனயந்
திடத்தா ரணிகலன் சாத்தியர்ச் சித்தா லெரிதழலி
னிடத்தா ரணியத்தி னின்றறஞ் செய்நல னெய்தியதே.

(இ-ள்.) இடத்தா ரணித்தடந் தேரேறியெய்தி யெயிலெரித்தார் - பரந்த பூமியாகிய பெரிய இரதத்திலேறிச் சென்று அசுரர்கள் கூடியிருந்த திரிபுரத் தைநகைத்தெரித்த பரமசிவனது, இடத்தாரணி தனத்தாள் தயையாலீ யிளைஞன்-வாமபாகத்தி லெழுந்தருளியிருக்கும் உமாதேவியார் கிருபையுடன் பெற்ற முருகக்கடவுள், நயந்திடத்தா ரணிகலன் சாத்தியர்ச்சித்தால் - மன விருப்பமுற மலர்மாலையும் பொன்னபரணமும் அணிந்து மலரினலர்ச்சித்தால்,

எரிதழலினிடத்தாரணியத்தினின்றறஞ்செய்நலனெய்தியதே - காட்டின்கண் பஞ்சாக்கினியின் மத்தியில் நின்று தவம்செய்வதினு லுண்டாகிய பிரயோசனம் எய்தும் என்பதாம், ஏகாரம் அசைச்சொல். (ரு)

தியக்கக் காரத்திரி சாகா தளித்தந் திகிரியினுர்த்
தியக்கக் காரத்திற லைத்தீர்த் தெயாதிகல் செய்கையிலத்
தியக்கக் காரத்திரத் தைத்தேய்த்த செங்கையன் சேணதியாத்
தியக்கக் காரத்திகழ் தேகர் தனையனென் சித்தத்தனே.

(இ-ள்.) தியக்கக் காரத்திரி சாகாது அளித்து-மடுவின்கணுள்ள முதலைவாயினிடத்து அகப்பட்டு மயங்கி ஆதிமூலமே யென்றழைத்த கஜேந்திரனிறவாதுகாப்பாற்றி, அந்திகிரியினுர்த்தியக்கக் காரத்திறலைத் தீர்த்து-அழகிய நேமிப்படையால் ஆவலுள்ள வியக்கனுகிய முதலையினுடைய வலியைத்தொலைத்துக்கொன்று, எயாதிகல் செய்கை யிலத்தியக்கக் காரத்திரத்தைத் தேய்த்த செங்கையன் - சிறிதுமிளைக்காது போர்செய்கையிற் சோர்வில்லாது கானல் விடப்பட்ட பாணங்களை யழித்த செந்தாமரைபோன்ற திருக்கைகளையுடைய திருமாலும், சேணதியாத்தியக்கக் காரத்திகழ் தேகர்தனையனென் சித்தத்தனே - ஆகாய கங்கையும் ஆத்திமாலையும் உருத்திராக்கமு மெலும்புஞ் சர்ப்பமும் விளங்காநின்ற திருமேனியையுடைய பரமசிவன் குமரன் என் சித்தத்திலெப்பொழுதும் இருக்குந்தன்மையை யுடையவனுவான் என்பதாம். (சா)

தத்தலை யாரக லாழிநஞ் சார்களத் தார்நதிச்சீ
தத்தலை யாரகத் தாய்ந்தே டளித்த தனையரெஞ்சித்
தத்தலை யாரக டாரயிற் கையரேய்ந் தாரையசீ
தத்தலை யாரக லாதடைந் தாணற் றயையினரே.

(இ-ள்.) தத்தலையா ரகலாழிநஞ்சார் களத்தார் - தவழ்கின்ற அலைகள் நிறைந்த விசாலமாகிய கடலினின்றும் வந்தவிஷத்தைத் தரித்த கழுத்தை யுடையவரும், நதிச்சீதத் தலையார் - கங்கையினுலுண்டாகிய குளிர்ச்சி பொருந்திய சடாமகுடத்தை யுடையவருமாகிய பரமனுர், அகத்தாய்ந்தே யளித்ததனையர் - மனதின்கண் ஆராய்ந்தேதந்த குமாரும், எஞ்சித்தத்தலையா ரகடாரயிற் கையர் - என் இருதயத்திலுள்ள அஞ்ஞானவிருளைப் பருகாநின்ற சோதிமயமாகிய ஞானசத்தியை யுடையவரும், ஏய்ந்தாரை யசீதத்தலையார் - தனக்கடிமையாயடைந்தவர்களைக் கெட்டமார்க்கத்தில் அலையாதிருக்கும்படி செய்பவருமாகிய முருகக்கடவுள், அகலாதடைந்தாணற்றயையினரே - என்னுள்ளத்தினின்றும் நீங்காதிருந்து காப்பாற்றுந்தன்மையை யுடையவராவர் என்பதாம்.

இனனந் தரத்தர்கை யாலர்ச் சனைகள்செய் தேத்தயிற்கை
யினனந் தரத்தர்தந் தாளோ கத்தின னேந்தலையா
வினனந் தரத்தரா கன்செந்தி லாகர னென்னகத்திற்
கினனந் தரத்தடர் காநாக நாத னெனினலனே.

(இ-ள்) இனனந்தரத்தர் கையா லர்ச்சனைகள் செய்தேத்தயிற் கையினன் - கூட்டமாகிய நம்போன்றவர்கள் கரத்தால் மலரைச்சொரிந்து துதிக்காநின்ற ஞானசத்தியையுடையவனும், அந்தரத்தர் தந்தாளோகத்தினன் - கங்கையைத் தரித்த வேணியையுடைய பரமனார்தந்து ரக்ஷிக்கும் திருவோகத்திலுள்ளவனும், ஏந்தலையா வினனந்தரத்தராகன் - ஏந்துகின்ற தரங்கத்தையுடைய பாற்கடலிலுள்ள ஆலிலையின்மே லறிதுயிலியாக நித்திரை செய்யுந் திருமாலின் இருதயத்தில் வசிப்பவனும், செந்திலாகரன் - செந்தில்மாநகரத்தை யிருப்பிடமாக வுடையவனும்; என்னகத்திற்கினன் - எனது மனத்தாமரைக்கு ஞானசூரியனைப்போன்றவனும், அந்தரத்தடர்காநாகநாதன் - தெய்வலோகம்வரை உயர்ந்திருக்கின்ற பழமுதிர்சோலைமலையின்க ணுள்ளவனுமாகிய முருகன், எனினலனே - என்றுதுதித்தால் வேண்டியநலமெய்துமென்பதாம்.

நலங்கடந் தண்டரை யாள்செந்தி லாகர னண்ணெயில
னலங்கடந் தங்கனார் செய்கண்ட கன்றனை நைத்தடர்கா
னலங்கடந் தங்கத்தை சேயரைத் தாங்கரி நாடிறையே
நலங்கடந் தண்செறி சாரலி னாதனென் னற்றந்தையே.

(இ-ள்) நலங்கடந் தண்டரையாள் செந்திலாகரன் - தேவர்களுக்கு அநேக நன்மைகளைச் செய்து காப்பாற்றிச் செந்தில்மாநகரத்தில் வீற்றிருப்பவனும். நண்ணெயில னலங்கடந் தங்கனார் செய்கண்டகன் தனைநைத்து அடர்கானலங் கடந் தங்கத்தை சேயரைத் தாங்கரிநாடிறை-அக்கினியின் மயமாகிய வாணாசுரனது கோட்டையைக் கடந்துபோய் அங்குள்ள வசுரனைச் சம்மரித்தும், மிகுந்த கானலையுடைய காட்டினிடத்து வாசம்பண்ணிக்கொண்டிருந்த அத்தை புத்திரர்களாகிய பஞ்சபாண்டவர்களை ரக்ஷித்த திருமால் விரும்பாநின்ற தலைவனும், ஏனலங்கடந்தண்செறி சாரலினாதன் - தினையின் வளத்தினாலும் மதஜலத்தின் பெருக்கத்தாலும் குளிர்ச்சியுள்ள மலைச்சாரலையுடைய குறிஞ்சிநிலத்திற்குத் தேவனுமாகிய முருகக்கடவுள், என் நற்றந்தையே - எளியேனாகிய எனக்கு மெய்ஞ்ஞானத்தைத் தாராநின்றபிதாவை யொப்பவனாவான் என்பதாம். (௧)

நல்லா ரணங்கலை ஞானா கரர்தன்னை நாடினர்க்கின்
னல்லா ரணங்கணைச் செய்தாரன் னாரை நலிகையர்கன்
னல்லா ரணங்களை யார்தந்த சேயர்தா னந்திகழே
னல்லா ரணங்ககற் றுறக் கரத்தார் நலசத்தரே.

(இ-ள்.) நல்லாரணங் கலைஞானநார் - நல்லவேதங்களுக்குங் கலைஞானங் களுக்கும் இருப்பிடமானவரும், தன்னை நாடினர்க்கின் னல்லாரணங்களைச் செய்தாரன்னுரை நலிகையர் - தன் கிருபையையடைந்திட நாளும் விரும்பித் துதிக்காநின்ற மெய்யடியார்களுக்குத் துன்பத்தைப்பொருந்த யார்செய்யினும் அவரைவருத்துகின்ற சத்தியுள்ள கையையுடையவரும், கன்னல்லாரணங்களை யார் தந்தசேயர் - கருப்பு விற்கையுடைய உமாதேவியார் தந்தகுமாரும்,தானந் திகழேனல்லாரணங்க கற்றூறக்காத்தார் - யானைமதம் ஓடுகின்ற தினைப்புனத் திலுள்ள வேடர்களின் மனவருத்தத்தைத் தீர்த்தருளுஞ் சடாக்ஷரத்தை யுடையவருமாகிய ஷண்முகர், நலசக்தரே - நல்ல சக்தியை யுடையவராவர் என்பதாம். (ய)

சத்தத் தரங்கக் கலாநிதி சார்ந்த சடையரிறைஞ்
சத்தத் தரங்க சனைக்காய் தழற்கண்ணர் தானத்தர்நஞ்
சத்தத் தரங்கச்செய் கண்டரின் சேய்கிளர் சாரலடர்
சத்தத் தரங்கறங் காகச்செல் கேகயன் றாள்கதியே.

(இ-ள்.) சத்தத்தரங்கக் கலாநிதிசார்ந்த சடையரிறைஞ்சத் தத்தர் - சப் தம் பொருந்திய வலைகளையுடைய கடலிற்றோன்றிய சந்திரனை அணிந்த வேணியை யுடையவரும், பத்துக்கைகளை யுடையவரும், அங்கசனைக்காய்தழற் கண்ணர் - மன்மதனைத் தகித்த நெற்றியில் அக்கினிக் கண்ணை யுடையவரும், தானத்தர் நஞ்சத்தரங்கச் செய்கண்டரின்சேய் - தேவர்களுக்கு ஆலகால விஷத்தினா லுண்டாகிய ஆபத்தைத் தீர்த்த கழுத்தையுடையவருமாகிய பரம னார் இனிதாக அளித்த குமானும், கிளர்சாரலடர் சத்தத்தரங்கறங்காகச் செல் கேகயன் - உயர்ந்த சாரல்மிகுந்த சப்தமலைகளும் காற்றாடியைப் போற்சுழலும் படியாக வதிவேகமாகச் செல்கின்ற மயில்வாகனத்தை யுடையவனுமாகிய முருகக்கடவுளின், தாள்கதியே - பாதாரவிந்தங்களிகபரத்துக்கு நன்மையைத் தரும் என்பதாம். ஈரைஞ்சு எனற்பாலது இரைஞ்சு எனநின்றது குறுக் கல்விகாரம். (யக)

கதிச்சந் தனத்தடங் காநிழற் றூதினைக் கான்றசதா
கதிச்சந் தனத்தனைக் காய்ந்தழ கற்காக் கனியிடஞ்செல்
கதிச்சந் தனத்தாத் தன்னிளஞ் சேயிடங் கன்னியின்சங்
கதிச்சந் தனத்தத்தை யேசென் றிசைத்தழை காதலித்தே.

(இ-ள்.) சந்தனத்தத்தையே - நல்ல தனங்களையுடைய கிளிமொழியைப் போலும் வார்த்தையையுடையவளே, கதிச்சந்தனத் தடங்கா நிழற்றூதினைக் கான்ற சதா கதிச்சந்தனத்தனைக் காய்ந்து - உயர்ந்த பொதியமலையிலுள்ள

சந்தனச்சோலையின் குளிர்ச்சிபொருந்திய மலரின் மகரந்தப்பொடியை வாரி வீசுகின்ற தென்றற்றேரையுடைய மன்மதனைத் தகித்து, அழகற்காக்கனி யிடஞ்செல் கதிச்சந்தன் - சுந்தரமூர்த்தி நாயனருக்காகப்பரவைநாச்சியாரிடம் விரைவாய்ச் சென்றதூதனும், நத்தரத்தன் - சங்கபாணியின் றலைவனுமாகிய பரமசிவனுடைய, இளஞ்சேயிடங் கன்னியின்சங்கதி சென்றிசைத்தழை காத லித்தே - முருகக்கடவுளிடம் இம்மடந்தை யுன்னை யிச்சித்து நினைத்துக் கொண்டிருக்குந் தன்மையைப்போய்ச் சொல்லி வரவழைப்பாய் என்பதாம். சந்தனம்-தேர். (௰௨)

காதற் றனத்தத்தை யார்கணெஞ் சத்தினன் கண்ணலர்கை
காதற் றனத்தத்தைச் செய்தழித் தாளயிற் கந்தனெறிக்
காதற் றனத்தத்தை சேயையாண் டான்கனி காதலனென்
காதற் றனத்தத்தைச் சேர்க்கான் சனனங் கடக்கரிதே.

(இ-ள்.) காதற்றனத் தத்தையார்க ணெஞ்சத்தினன் - விருப்பமுள்ள தனங்களையுடைய கிளியைப்போன்ற மங்கையர்கள் இருதயத்தில் வசிப்பவனும், கண்ணலர்கை காதற்றனத்தத்தைச் செய்தழித்தா ளயிற்கந்தன் - சூரன்முதலாகிய பகைவர்களினுடைய கைகளையும் காதுகளையும் அரிந்து கெடும்படிசெய்து தேவர்களையாண்ட வேலாயுதத்தையுடைய சடானனனும், நெறிகாதற்றனத் தத்தைசேயை யாண்டான் கனிகாதலன் - வழியை மறைக்கின்ற விரவில் தன்னைவிரும்பிய அத்தைசேயாகிய அர்ச்சுனனை இரக்ஷித்த திருமாலின் புத்திரியாகிய வள்ளிநாயகிக்குக் கணவனுமாகிய முருகக்கடவுள், என் காதற்றனத்தத்தைச் சேர்க்கான் சனனங் கடக்கரிதே - என்று துதிக்காமலும் கரங்களைச் சேர்த்துக் கும்பிடாமலுஞ் சோர்வையுடையவனா யிருப்பவன் சன்மசாகரத்தைக் கடப்பது அருமையாம் என்பதாம். (௰௩)

கரித்தா ரகன்றனைக் காயயிற் கையினர் காலனைச்சங்
கரித்தா ரகத்தினை யந்தீர் சடானனர் கையினலங்
கரித்தா ரகனிலத் தேத்தின ரன்னார் கனியச்செயே
கரித்தா ரகநிலை யத்தர்காங் கேயரென் கண்ணினரே.

(இ-ள்.) கரித்தாரகன் றனைக்காயயிற்கையினர் - யானைமுகத்தையுடைய தாரகனென்னும் அசுரனைச் சம்மரித்த சத்தியுள்ள கையையுடையவரும், காலனைச் சங்கரித்தா ரகத்தினையந்தீர் சடானனர் - மார்க்கண்டரின்பொருட்டு இயமனைச் சம்மரித்த பரமனார் மனத்தின்கணுள்ள சந்தேகத்தைத் தீர்த்த ஷண்முகரும், கையினலங்கரித்தா ரகனிலத்தேத்தின ரன்னார்கனியச் செயே கர் - பூமியி லிருப்பவர்க்குள் யார் மலர்களால் அலங்கரித்துத் துதித்தார்களோ

அவர்களுடைய மனம் ஆனந்தமடையும்படி செய்யுந்தன்மையில் ஒப்பற்றவரும், இத்தாரக நிலையத்தர் - இப்பிரணவத்தை யிருப்பிடமாக வுடையவரும், காங்கேயர் - கங்கையி லுற்பத்தியானவருமாகிய முருகர், என் கண்ணினரே - என் கண்களி லெப்பொழுதும் இருப்பார் என்பதாம். ஏ-அசைச்சொல். (௧௪)

கண்டனந் தந்தங் கயரு னெனக்கிளர் கன்னியெழிற்
கண்டனந் தந்தங் கணையாற் கழைக்கையர் காய்தலிற்றேன்
கண்டனந் தந்தங் கடிந்தழை யீரெனக் காட்டினள்கார்க்
கண்டனந் தந்தங் கரியய னேத்தயிற் கையினனே.

(இ-ள்.) கார்க்கண்டனந் தந்தங்கரியயனேத்தயிற் கையினனே - கரிய கண்டத்தையுடைய பரமசிவனுஞ் சங்கபாணியும் நான்முகனும் துதிக்காநின்ற வேலாயுதத்தைக்கொண்ட முருகக்கடவுளே, கண்டனந்தந்தங் கயருனெனக் கிளர்கன்னி யெழிற் கண்டனந் தந்தங்கணையாற் கழைக்கையர் காய்தலில் - கரும்பு வில்லேந்திய மன்மதனுர் கயல்போன்ற கண்களையும் யானைத்தந்தம் போன்ற தனங்களையுமுடைய மங்கையினது வனப்பைநோக்கி எண்ணிக்கையற்ற தம் மலர்ப்பாணங்களை யேவி வருத்தஞ்செய்கையால், தேன்கண்டுஅனந் தந்தங் கடிந்தழையீரெனக் காட்டினள் - நாங்களுணவாகக்கொடுத்த வன்னத்தையும் தேனையும் கற்கண்டையும் வெறுத்துத்தள்ளி உன்னையே காண்பித்து அழைத்து வாருங்களென்று கூறினள் என்பதாம். (௧௫)

கைச்சங் கரியயன் காணுத சங்கரன் கட்கிசைநங்
கைச்சங் கரியழ காத்தந்த கந்தனிக் கானணித்தி
கைச்சங் கரிய கனியாடல் கண்டடங் காரயர்தீங்
கைச்சங் கரியயிற் கையின னண்டர்ச காயத்தனே.

(இ-ள்.) கைச்சங்கரியயன் காணுதசங்கரன் - செங்கரத்தில் சங்கத்தைக் கொண்ட திருமாலுந் திசைமுகனுந் தேடாநின்ற சிவபெருமானுடைய, கட்கிசை நங்கைச்சங்கரி யழகாத்தந்த கந்தன் - சிறந்த கண்களுக்கிசைந்த தேவியாகிய லோகமாதா பிரியமாகப்பெற்றமுருகன், இக்கானணித்திகைச் சங்கரிய கனியாடல் கண்டடங்காரயர் தீங்கைச் சங்கரியயிற் கையினன் - இவ்வனத்தையடைந்து மயங்கியவிடத்து ஒப்பற்ற வள்ளிநாயகியின் விளையாட்டைப் பார்த்துப் பகைவர்களாற் செய்யப்பட்ட கெடுதியைத் தொலைத்து அனுக்கிரகம் செய்த வேற்படையைத் தாங்கிய திருக்கரத்தையுடைய ஷண்முகப்பெருமான், அண்டர் சகாயத்தனே - தேவர்களுக்கு அநுகூலஞ் செய்து வருபவனுவான் என்பதாம். கன்னி கனி யென இடைக்குறை அத்து,சாரியை. (௧௬)

காயத் தாங்கக் கடல்தா னெனக்கிளர் கண்ணலரைக்
காயத் தாங்கக் கணிந்திரன் கன்னியின் கண்ணர்சிதா
காயத் தாங்கக் கனற்கணஞ் சங்கரன் காதலர்ச
காயத் தாங்கக் காத்தா ரயிலர்சிங் காரத்தரே.

(இ-ள்.) காயத்தாங்கக் கடல்தானெனக் கிளர்கண்ணலரைக்காயத்தர் - அவயவங்களுள்ள அலைகள் நிறைந்த ஆர்கலியென்று சொல்லும்படியாகப் பரந்த சத்துருக்களாகிய அசுரர்களைக்கொன்ற தலைவரும், அங்கக்கணிந்திரன் கன்னியின் கண்ணர் - ஆயிரங்கண்களுள்ள சரீரம் அமையப்பெற்ற மகபதியின் புதல்வியாகிய தெய்வயானையின் கண்களில்வசிப்பவரும், சிதாகாயத்தர்-ஞானகாசத்தில் வீற்றிருப்பவரும், அங்கக்கனற்கணஞ் சங்கரன் காதலர் - புனலைத் தருகின்ற கனலின் மயமாகிய நெற்றிக்கண்ணுள்ள அழகிய பரமசிவன் குமாரரும், சகாயத்தர் - யாவருக்கும் உதவி செய்பவரும், அங்கக்காத்தாரயிலர் - வேலைக்கையினிடத்துப் படையாக வகிப்பவருமாகிய ஷண்முகநாதர்,சிங்காரத்தரே-மிகுந்தஅலங்காரத்தையுடையவராவார் என்பதாம். அத்துக்கள் சாரியையே தேற்றம். (கஎ)

காரன்ன கந்தாத் தார்தந்த காளையெங் கந்தனலங்
காரன்ன கந்தாத் தாயீன்ற காதலன் கண்ணிலடங்
காரன்ன கந்தாத் தார்ந்திடச் செய்சேய் கடற்சலச்சங்
காரன்ன கந்தாத் தானடைந் தேதினங் காத்தனனே,

(இ-ள்.) காரன்ன கந்தாத்தார் தந்தகாளை - கரிய கண்டத்தையுடைய பரமசிவனார்பெற்ற காளையைப்போன்றவனும், எங்கந்தன்-நம்முடைய ஷண்முகனும், அலங்காரன் - அசைகின்ற முத்துமாலையையுடையவனும், நகந்தரத்தாயீன்ற காதலன் - மலையரசன் புத்திரியாகிய பார்வதி பெற்ற குமானும், கண்ணிலடங்காரன்ன கந்தாத்தார்ந்திடச்செய் சேய் - கருணையில்லாத அசுரர் சோதிமிகுந்த பொன்னுலகமடையும்படி செய்த சேயனுமாகிய ஷண்முகக்கடவுள், கடற்சலச் சங்காரன்னகந்தாத்தானடைந்தே தினங்காத்தனனே - சமுத்திரத்தின் புனல் முழுமையும் பருகிய அகத்தியமுனிவன் தன்னுடைய மனத்திலிருக்கும்படி செய்யத் தான்வசித்து நாடோறுங் காப்பாற்றினன் என்பதாம். ஏ - அசை. (கஅ)

தனத்தா னனச்சதி யாய்ந்தா டரன்கா தலனரியா
தனத்தா னனச்சன ராகந் தகர்த்தகந் தன்னனநா
தனத்தா னனச்சசி யான்கே கயத்தினன் சார்நயச்சே
தனத்தா னனச்சகத் தார்க்கினி தாகிய தாய்தந்தையே.

(இ-ள்.) தனத்தானனச் சதியாய்ந் தாடரான் காதலன் - தனத்தானன வென்னுந் தாளத்தை யாராய்ந்து கனகசபையின்கண் நடனம் புரிகின்ற சபாபதியின்குமாரனும், அரியாதனத்தான் - சிம்மாதனத்தையுடையவனும், அனச்சன ராகந்தகர்த்த கந்தன் - கரியவிடத்தையொத்த அசுரரின் மார்பைப் பிளந்த ஷண்முகனும், அனநாதன் நத்து ஆனனச்சசியான் - நான்முகன் விரும்பாநின்ற வதனமாகிய சந்திரனை யுடையனும், கேகயத்தினன்-மயிலை வாகனமாகக் கொண்டவனும், சார்நயச்சேதனத்தான்-நயஞ்சார்ந்த அறிவிற்கு இருப்பிடமானவனுமாகிய முருகக்கடவுள், அச்சகத்தார்க் கினிதாகிய தாய் தந்தையே - தெய்வலோகத்தி லுள்ளவர்கட்கு இனிமையான மாதாபிதாவை ஒப்பவனுவான் என்பதாம். ஏ-தேற்றம். (௰௧)

தந்தனந் தந்தத் தனதா னனநடச் சங்கரனூர்
தந்தனந் தந்தத் தனக்காழி நாயகித் தாயளிநித்
தந்தனந் தந்தத் தளிர்க்கையிற் கீரந் தனையயினல்
தந்தனந் தந்தத் தடர்ந்தாண்ட நாதனற் றூள்சரணே.

(இ-ள்) தந்தனந்தந்தத் தனதான்னநடச் சங்கரனூர் தந்தனந்-தந்தனம் தந்தத்தனதானன எனும் தாளத்துக்குப் பொருந்த நடனம்புரிகின்ற பரமசிவன் பொருளும், தந்தத்தனக்காழி நாயகித்தாயளிநித் தந்தனந்தந்தத் தளிர்க்கையிற்கீரந்தனை யயினற்றந்தன்-யானையின் கொம்பையொத்த தனங்களையுடைய சீகாழியிலுள்ள திருநிலைநாயகியாகிய அன்னை, மனதில்நினைத்துத் தினந்தோறும் தனது அழகிய மாந்தளிர்போன்ற விரல்களையுடைய கையினுற் கொடுக்கப்பட்ட ஞானப்பாலைப் பருகி நல்லநூல்களைத் தெரிந்தவனும் - நந்தந்தத்தடர்ந்தாண்ட நாதனற்றூள் சரணே - நம்முடைய கெடுதியைத் தீர்த்துக்காப்பாற்றிய தலைவனுமாகிய முருகக்கடவுளின் பாததாமரைகள் எப்பொழுதுங் காவலாம் என்பதாம். ஏ-அசை. (௨௰)

சூரக்காக் கார்நிறத் தண்டரைச் சாயயிற் றூட்டிகர்கஞ்
சூரக்காக் காஞ்சடை தாங்கர னூர்தந் தனயரினே
சூரக்காக் காத லடைந்திடச் செய்சே தனர்கிரித்தஞ்
சூரக்காக் காதகர்க் காய்ந்தா னகத்தர்நாத் தந்தனரே.

(இ-ள்.) சூரக்காக்கார் நிறத்தண்டரைச் சாயயிற்றூட்டிகர் - பாணமிருக்கின்ற கையையுடைய மேகத்தைப்போன்ற நிறமுள்ள சத்துருக்களாகிய அசுரரைக் குத்திவிழும்படி செய்கின்ற சத்தியுள்ள பெருமையையுடையவரும், கஞ்சூரக்காக்காஞ்சடை தாங்கரனூர் தந்தனயர் - அநேக பிரமரின் என்பையும் அரக்கையொத்த செந்நிறம்வாய்ந்த சடையையுந் தாங்குகின்ற பரமனூர் தம் புத்திரரும், இனேசூரக்காக் காதலடைந்திடச் செய்சேதனர் - இனியஅடியார்

தன் சடாக்ஷரத்தின் விருப்பமடையும்படிக்குச் செய்யாநின்ற மெய்யறிவாளரும், கிரித்தஞ்சர் - உலகிலுள்ள மலைகளிடத்துப் பற்றுக்கோடுடையவரும், அக்கரக்கரக் காதகர்க்காய்ந்தானகத்தர்-அந்தக்காஞகிய கொடியவனைச் சம்மரித்த திருமாலி னிருதயத்திலிருப்பவருமாகிய ஷண்முகர். நாத்தந்தனரே - எனக்குப் பாடும்படிக்கு நாவை மகிழ்ந்து தந்தருளினார் என்பதாம். (உக)

தனதா னியங்க நடத்தர னீகா தலசிலையா
தனதா னியங்கனி யாஞ்சே யிழைதனஞ் சார்ந்தணைசே
தனதா னியங்கட லென்னத் தழங்கெந் தணிகையயீ
தனதா னியங்கடந் தாணினைத் தேதினஞ் சாற்றினனே.

(இ-ள்.) தனதானியங்க நடத்தரனீகாதல - தனதுவிடை நடக்கச் செலுத்தாநின்ற பரமசிவன் பெற்ற தனய! சிலையாதன - மலையை இருப்பிடமாகவுடையவனே, தானியங்கனியாஞ் சேயிழைதனஞ் சார்ந்தணைசேதன - இந்திரன் புத்திரியாகிய தெய்வயானை மகிழும்படிக்குச் செய்கின்ற அறிஞ, தானியங்கடலென்னத் தழங்கெந்தணிகைய - வாத்தியங்கள் வாரிதியைப் போலச் சப்திக்கின்ற தணிகையையுடைய முருகக்கடவுளே, தனதானியங்கள் தந்தாணினைத்தே தினஞ்சாற்றினனே - தினந்தோறுமுன்னை நான் மனத்தில் நினைத்துத்துதித்தபடியால் நீ பொருளுந்தானியங்களும் நிறைந்திருக்கும் படிக்கருள்செய்து காப்பாற்றுவாயாக என்பதாம். (உஉ)

இனஞ்சா ரரக்கரி ராதழித் தான்றன் னிளையணகை
யினஞ்சா ரரக்கங் கணநாதர் தஞ்சே யிலைசெயயி
லினஞ்சா ரரக்கழ லேய்ந்தெனச் செய்தாட் டிகநிலைய
னினஞ்சா ரரக்கத் திடத்தா னெனையிங் கிகக்கலனே.

(இ-ள்.) இனஞ்சாரரக்கரிராதழித்தான் றன்னிளையள் - கூட்டமாகிய நிருதர்கள் உயிரோடிருக்காது சம்மரித்த திருமாலின் தங்கையும், நகையில் நஞ்சார ரக்கங்கணநாதர் தஞ்சேய் - பற்களினிடத்து விஷமுள்ள பாம்பைக் கங்கணமாயணிந்த சிவபெருமான் தந்ததனயனும், இலைசெய யினஞ்சாரரக்கழலேய்ந்தெனச்செய் தாட்டிகநிலையன் - தகட்டுவடிவமான வேற்படையால் சத்துருக்களாகிய அசுரர்களை அனலைச்சார்ந்த அரக்கைப்போல உருகும்படி செய்யாநின்ற பெருமைவாய்ந்தவனும், இனஞ்சார ரக்கத்திடத்தா னெனை யிங்கிகக்கலனே - இனிமையும் அழகுமுள்ள நட்பாளர் கண்களிலேயிருந்து அருள்கின்றவனுமாகிய ஷண்முகன் எளியேஞகிய வென்னைத் தள்ளிவிடமாட்டான் என்பதாம். (உ௩)

கலகங் கரித்தா ரகனெதிர்த் தேசெயக் காய்ந்தழித்தி
கலகங் கரித்தா ரழைத்தன ரன்னூர் கடந்தவையய
கலகங் கரித்தா ரயிற்காத் தாயலங் கல்லணிய
கலகங் கரித்தா ரணியா டயாநிதி காநினேந்தே.

(இ-ள்.) கலகங் கரித்தாரக னெதிர்த்தே செயக்காய்ந்தழித்து - சூரன் தம்பியாகிய யானைவடிவமுள்ள தாரகாசுரன் போர்க்களத்தி லெதிர்த்துச் சண்டைசெய்ய அவனைக் கோபத்துடன்வதைத்து, இகலகங் கரித்தா ரழைத்தனரன்னூர் கடந்தயை யகலகங்கரித்தா ரயிற்காத்தாய்-அவர்களுக்குள் யார் அகங்காரத்துடன் போருக்கழைத்தார்களோ அவர்களுடைய சரீரத்தினையுங் கிருபையில்லாத மனத்தையுங் கரியாக்கிவிட்டுவந்த சேர்கின்ற வேற்கையாய்! அலங்கல்லணியகல - கடப்பமாலையணிந்த உரத்தாய், கங்கரித்தா ரணியாடயாநிதி-கருடன்மேல் வருகின்ற திருமாலின் உலகத்தைக் காப்பாற்றுகின்ற கிருபையுள்ள முருகக்கடவுளே, கா நினேந்தே - எளியேனுகிய என்னை மனதில் நிலைத்துப் புரப்பாய் என்பதாம். (உ௪)

காலனந் தத்தி லடர்க்கா தெனைத்தினங் காத்தினிச்செங்
காலனந் தத்திறை செய்யா தளித்தள கங்களங்கார்
காலனந் தத்திணை யார்கன்னி காதலைக் காய்தென்றற்
காலனந் தத்திகழ் தீக்கணிற் காதரன் காதலனே.

(இ-ள்.) தென்றற்கால னந்தத்திகழ் தீக்கணிற் காதரன் காதலனே - தென்றற்காற்றைத் தேராகவுடைய மன்மதன் கெடவிளங்குகின்ற நெருப்புக் கண்ணினாலே கோபித்த பரமசிவன் புத்திரனே, காலனந் தத்திலடர்க்கா தெனைத்தினங்காத்து - எமனானவன் முடிவுகாலத்து வந்தென்னை வருத்தாமல் நாள்தோறும் காத்தும், இனிச் செங்காலனந் தத்திறைசெய் யாதளித்து-சிவந்தகால்களுள்ள அன்னத்தின்மேல் வராநின்ற நான்முகன் இனிமேற் படையாதிருக்கும்படிக் கியற்றியும், அளகங்களங்கார் காலனந்தத் திணையார் கன்னி காதலைக்காய்தி - கரியநிறத்தை வீசுகின்ற இருளையுஞ் சங்கத்தையும் ஒத்திருக்கின்ற கூந்தலையுங் கண்டத்தையுமுடைய மங்கையராலுண்டாகிய மயக்கத்தைக்கெடுத்துக் காப்பாற்றுவாய் என்பதாம். (உரு)

தலத்தா ரடிய ரரந்தையைத் தீர்த்தகந் தன்றழைத்த
தலத்தா ரடியர்ச் சனைகள்செய் தாரன்னர் தாய்தலையின்
றலத்தா ரடியா ரூர்சேய் கிராதர் தனயையென்கைத்
தலத்தா ரடியணி யாயென்ற நாதனற் றாள்சரணே.

(இ-ள்.) தலத்தாரடிய ரரங்கைதயைத் தீர்த்தகந்தன் - பூமியின்கணுள்ள தனது மெய்யடியார்களின் துன்பத்தைத் தீர்த்தருளாநின்ற ஷண்முகனும், தழைத்ததலத்தா ரடியர்ச்சனைகள் செய்தாரன்னர்தாய் - செழித்த வில்வ தளத்தால் தன்னை யார் அர்ச்சனைகள் செய்தார்களோ அவருக்குத்தாயை யொப்பானவனும், தலையின் தலத்தாரடியரனார்சேய்-ஆத்திமாலையைச் சிரசி லணிந்த பழமையாகிய பரமசிவன் புத்திரனும், கிராதர்தனயை யடி-வேடரு டைய புதல்வியேயென்றழைத்து, கைத்தலத்தாரடியணியாயென்ற நாதனற் றுன் சரணே - கையினாலே தொடுக்கப்பட்ட மாலையையணிந்து கொள்வா யென்ற பெருமானுமாகிய ஷண்முகக்கடவுளின் பாதாரவிந்தங்கள் காவலாம் என்பதாம். (உசு)

சரக்கஞ் சனகந் தகித்தாலங் காட்டினிற் சார்ந்தாங்கே
சரக்கஞ் சனகந் தரித்தா டரனார் தனயர்நிரா
சரக்கஞ் சனகந் தடிந்தா னகத்தர் தயையகனெஞ்
சரக்கஞ் சனகந் தகர்த்தார் சரணந் தலைக்கணியே.

(இ-ள்.) சரக்கஞ்ச் னகந்தகித்து-தாமரை மலரைப் பாணமாகக்கொண்ட மன்மதன் வடிவத்தைக்காய்ந்து, ஆலங்காட்டினிற் சார்ந்தாங்கே சரக்கஞ்ச னகந் தரித்தாடரனார் தனயர் - திருமாலினுடைய எலும்பும் நான்முகன் தலை யும் அணிந்து திருவாலங்காட்டினுள்ள சிற்சபையைச் சார்ந்து ஆனந்தத்தாண் டவஞ்செய்த பரமனார் குமாரரும், நிராசர் - ஆசையற்றவரும், அக்கஞ்சனகந் தடிந்தானகத்தர் - அந்தக்கம்சனுடைய குவலய பீடத்தைத் தகர்த்த திரு மாலி னிதயத்திலிருப்பவரும், தயையகனெஞ்சரக் கஞ்சனகந் தகர்த்தார்- இரக்கமில்லாத மனதுள்ள அசுரருடைய கண்களையுங் கவசத்தையும் பிளந்த வருமாகிய ஷண்முகரின், சரணந் தலைக்கணியே - பாதாரவிந்தங்கள் எளியே னுடைய சிரசிற்கு ஆபரணமாம் என்பதாம். (உஎ)

அணியனங் காரின் னழகார் நடைநல் லளகத்தின
ரணியனங் காரிநல் காண்டலைக் கேதன னாயிற்கை
யணியனங் காரிகை யார்நய னத்தா ரழகனளிக்
கணியனங் காரியங் கண்டாய்ந் தகத்தெணி யாளத்தனே.

(இ-ள்) அணியனங்கா ரின்னழகார் நடைநல்லளகத்தின ரணியனங்காரி நல் காண்டலைக்கேதனன்-அழகிய அன்னத்தைப்போலும் நடையையும்மேகத் தைப் போன்ற நல்லகூந்தலையுமுடைய மங்கையரைப் படையாகவுடைய மன் மதனை யெரித்த பரமசிவன்பெற்ற கோழிக்கொடியை யுடையவனும், அயிற்

லகயணியன் - வேற்படையைத் தரித்த பெருமையையுடையவனும், அம்காரி கையார் நயனத்தாரழகன் - அழகிய மங்கையர் நோக்கிக் கொண்டிருக்கின்ற வனப்பையுடையவனும், அளிக்கணியன்-கிருபை நிறைந்திருக்கின்றவனுமாகிய முருகக்கடவுள், நம்காரியங்கண்டாய்ந்தகத் தெணியாளத்தனே - நமது நற் செய்கைகளை மனதினால் ஆராய்ந்துபார்த்து இரக்ஷிக்குந் தன்மைவாய்ந்த தலை வனுவான் என்பதாம். (உ௰)

அத்தக் கனங்க ணிகரண்ட ரைக்கா யயிலினன்றேர்ந்
தத்தக் கனங்கணி ராதழித் தார்தன யன்னிலத்தெற்
கத்தக் கனங்கணிற் காணநின் றூரிதை யன்னிலஞ்சி
யத்தக் கனங்க ணிறையல ரார்செந்தி லான்கதியே.

(இ-ள்.) அத்தக்கனங்கள் நிகரண்டரைக் காயயிலினன் - கைகளுள்ள மேகத்தையொத்த பகைவராகிய அசுரர்களை வதைக்கின்ற வேலாயுதத்தை யுடையவனும், தேர்ந்தத்தக்கனங் கணிராதழித்தார் தனயன் - தன்னை மதி யாது யாகத்தைச்செய்த, அந்தத்தக்கன் தன்மையைத் தேர்ந்து அவ்வி டத்து அவன் இருக்காதபடிசெய்த பரமசிவன் குமரனும், நிலத்தெற்கத்தக்க னங் கணிற்காண நின்றூரிதையன் - பார்வதிதேவி திருமணச்சமயத்தில் பூமிக் குத்தெற்குப்பக்கஞ் சமமானதன்மை யாவர்க்குந்தெரியும்படி வந்திருந்த அகத் தியமுனிவருடைய இதயத்திலிருப்பவனும், இலஞ்சி யத்தக்கனங்கணிறை யலரார் செந்திலான் கதியே - சங்குகளும் அன்னங்களும் தேன்கொழிக்கும் மலர்களும் நிறைந்த தடஞ்சூழ்ந்த செந்தில்மாநகரத்தில் எழுந்தருளி இருப்ப வனுமாகிய முருகக்கடவுள் இம்மைமறுமைக்கு வேண்டும்பொருள் தருவான் என்பதாம். (உக)

ஏறத் தனத்தரி யார்க்கடங் காரிற் றிடச்செயரி
யேறத் தனத்தந்தி யின்கைகை யார்கிரிக் கீசனியல்
ஏறத் தனத்தடி யாரிடஞ் சார்ந்தியற் றெந்தையயி
லேறத் தனத்தக் கிரிகளின் சேய்க்கி திசைத்தனனே.

(இ-ள்.) ஏறத்தனத்தரியார்க் கடங்காரிற்றிடச் செயரியேறு - இடபத் தையுடைய பரமசிவனுக்குஞ் சங்கபாணிக்கும் அடங்காதவராகிய அசுரர்கள் கெடும்படி செய்கின்ற ஆண்சிங்கமும், அத்தனத்தந்தியின்கை, கையார்கிரிக் கீசன் - இந்திரன் மகளாகிய தனங்களையுடைய தெய்வயானையை மணஞ் செய்த இடமாகிய திருப்பரங்கிரிக்குத் தலைவனும், இயல் ஏறத்தனத்தடியா ரிடஞ்சார்ந் தியற்றெந்தை - தன்னை விரும்புகின்ற அடியாரிதயத் தெழுந்

தருளிநின்று இலக்கணம் முதலியவை மிகுதியாக வளரும்படி அனுக்கிரகஞ் செய்கின்ற எந்தகப்பனும், அயில்ஏறு அத்தன் - வேற்படையைத் தரித்த கையையுடையவனும், அத்தக்கிரிகளின் சேய்க்கு - பொன்மயமாகிய மலைகளினிடத்து வீற்றிருந்து காப்பாற்றுகின்றவனுமாகிய ஷண்முகப் பெருமான் பேரில், ஈதிசைத்தனனே - இந்த நிரோட்டயமகவந்தாதியை அக்கடவுளின் கிருபையால் இயம்பினேன் என்பதாம். (௩௰)

## நூற்பயன்.

தொலையாத சென்மக் கடற்கரை யேற்றிடுந் தோணியைமெய்க்
கலைஞானங் கட்குரை யாணியைக் கந்தனைக் காதலுறும்
புலமார்செதன் னிம்பைச் சவுந்தர பாரதி போற்றிநவில்
நலமார் நிரோட்டக் கலித்துறை கற்று னலமெய்துமே.

முமையினும்வந் தாள்சண் முகநாதன் பேரில்
நிமலையரு ளாற்செய் நிரோட்ட—யமகவந்
தாதிநூல் வாழிசெய்தோ னுக்குவித்தோன் மேன்மைபுகழ்
நீதியுடன் வாழி நிதம்.

## நிரோட்டயமகவந்தாதி மூலமும்-உரையும்

முற்றுப்பெற்றன.

உ

திருப்பரங்கிரிக் குமரன்மேற் பாடிய

# தகாரவண்ணம்.

சந்தக்குழிப்பு.

தனனா தனனா தனதத்ததனதத்த தனனாதனனா
தனதத்த தனதத்த தனதந்த தனதந்த தனதந்த
தனதந்த தனதந்த தன்தந்த தனதத்த தான.

ஆண்கலை.

(1) தலமே வியபூ தரமுற்ற சிறகைக்கொய்
தவன்வா னவர்சீ தளமெய்க்கி ரணமிக்க
தாளங்கு லவுவண்டு தவழ்செங்கை யினர்தந்த
தனையன் றினம்வணங்கு தளிரொத்த பாதர்

(2) தருநே ருயர்தா தகிமைப்பு யலெருக்கி
தழிகூ விளமா தவளப்பி றையுன்மத்தை
தழுவுஞ்ச டிலமங்க தமுடன்றொ டையிலங்கு
தலைவன்று திசெய்கின்ற தணிகைக்கு மாரர்.

(3) தடமார் சதுர்வே தவனப்பி ரமாத்தர்
தணவா தகலா தனைப்பொ ருவுநித்தர்
தமிழின்க லைதெளிந்த தனையெங்கு முறநன்கு
தவவன்பொ டுநினைந்து தருசித்த யோகர்.

(தொங்கல்) தந்திரமா வுய்யவரு டாயனார். கலை. (ஞு)

(4) தனிமா மலரா தனம்விட்ட ருணநத்து
தலினா றருனேன் தயமொத்த வதரித்த
தயறந்தி னமருங்கு றளரும்ப டிவளர்ந்த
தனமந்த ரமழுந்து தடமெத்து மார்பர்.

(5) தழல்போல் மயிர்சார் தலைபெற்று நடைகற்ற
தமரே ருறுகா தகர்நச்சு டலிறுத்த
தளமஞ்சொ லியினுஞ்ச தமடங்கு வகையின்ப
தமடைந்தி டலுமின்ப தவியுய்க்கு நேசர்.

(6) ததைவால் மயில்சூழ் தமரக்க டல்படைத்த
தளிநா டுபேயோ தாமொய்த்த டையுமெக்கர்
தணிநின்று ளமகிழ்ந்து தனதஞ்சி றைவிரிந்து
தழையும்ப டிநடஞ்செய் தலமெச்சு வாமர்.

தஞ்செனவே நல்லதுசொல் தாதையார். கலை. (௰)

(7) தயிர்பா னவநீ தமடுத்த டிகொளத்தர்
தன்மையே மறவா தமனத்த றுமுகத்தர்
தனிதஞ்செ றிசிலம்பு தரிசெஞ்ச ரணர்சந்த
தமிணங்க மார்வந்து தரிசிக்கும் வீரர்.

(8) தரியா தழிவே தனைப்பு வியினிற்செய்
தகையா லடர்போ தகவத்தி ரமடுத்த
தனுசன்சி ரம்விழுந்து தகரும்ப டிபுரிந்த
தமையன்பி னுறுகந்தர் தளிநத்து நீதர்.

(9) தடிதோல் கறைசார் தசையிச்சை யினெணிக்கை
தவறு துதபோ தனரைக்கு கையினுய்த்த
தடிவன்கு றளிரந்து தவிரும்ப டிபுரிந்து
தயவின்ப டிபுரந்த தருமச்சொ ரூபர்.

(தொங்கல்) தந்தையர்தாய் சொன்னபடி சார்குவார் கலை. (௰௩)

(10) தறிவே பொடுகூ தவளக்க ழுமலத்தர்
தளுமே டெதிர்சேர் தடினித்து றைவலத்தர்
தபனன்க ருநுழைந்து தடவும்பொ ழில்துலங்கு
தணறுந்த ளமிகும்ப தலைமைப்ர தேசர்.

(11) ததிநா ரதரா தவரற்பு தவிசிட்டர்
தமுனோ துசநா தரிலக்க விரதத்தர்
தமரங்கை யினெருங்கி தழிவந்த மலர்சிந்து
தருணம்பு ளகுகொண்ட தனுமைப்பு யேசர்.

(12) தனுமே லிசைகே தனமுற்சி னகாத்தர்
தயிலர் கார்சே தனவிப்பி ரர்கள்கர்ச்சி

தபரங்கி ரியர்பொங்கு ததிமண்ட யிலாஞ்சு
தமகன்கி ளைஞர்கம்பி தமொழித்த நாதர்.

(தொங்கல்) தந்தியையனோர் மையுலவு சாரல்வாய் தலை. (இ)

பெண்கலை.

(13) தராமார் கொடிசி தமலீர்ப் புயன்மணித்தி
தலைசே ரிருகா தமணத்தொ டுறைபுற்பு
தமிரண்டு றுவளைந்த தனுவின்று ணைகள்ரஞ்சி
தமிகுப்பு னிதமென்ச ததளத்தி ருனு.

(14) தகையோர் மதிமே தகுமைக்கு வளைநத்து
தகமார் சுழியா தரவைப்பு ரியுமுச்சி
தமுறும்ப வளமின்க தலியின்க வைசுமந்து
தவிசின்றி யுறல்கண்ட தனைநத்தி யீது.

(15) தரையோர் விஞ்ஞளோர் தரணிச்சு மையுறத்தர்
தவமோ யெனவோ தலுமப்பொ ழுதினிற்ப
தயுகம்பு விபடிந்து தளவின்றெ டைமருங்கு
தவினிங்கு ளபெண்ணென்று தனுளச்சு ரூது.

தந்ததுகா ணல்லவினை தானனு. (இனு)

(16) தயலா லணியார் தருசச்சி னெழில்பெற்ற
தடமா னபயோ தரிபத்து யர்பருப்ப
தமெனுந்த லைகொளும்ப தகனங்க மடர்சங்க
தரன்மைந்தன் விடுமம்பி தயமுற்ற தானு.

(17) தவுபா லுறுவோ தனம்விட்டு னதுதுப்ப
தராமார் பிரசா தமுணப்ப ரவியுற்ற
தமியன்செ யலறிந்து தணிவின்றி வளர்கின்ற
தவனந்தெ றுமருந்து தவலுற்றி டாத

(18) தகடா ரணிமா தவியிற்கு லவியொத்த
தளமா ருும்வினை தமலர்ப்ப ளியினைச்சு

தனுறுந்தி ருமடந்தை தனதன்று ணைமடந்தை
தருமென்றி டவிருந்து தவருக்கு மானி.

தந்திடுதார் மெய்யளென வாகியே. (௯)

(19) தனமா தரினு தனமொத்து வடமெய்ச்சு
தனமா டிளவா தமலைக்க ளபமிட்டி
தமிகுப்பு முகிலங்கு தனுமஞ்சு றவணிந்து
தகராங்கு மூல்திமிர்ந்து தடியிட்டி ராது.

(20) தளிநா ளும்விடா தகரப்ப டைவைவச்சு
தனையே மதியா தவிழித்து ணைமிரட்டு
தனுறஞ்ச னமணிந்து தமசின்றி லதமிங்கி
தமிகும்ப டிபுனைந்து தவறற்ற நார

(21) தருமா லுறுநா தமயச்சு ருதிதப்பி
தமிலா துயர்கீ தமனப்ப டிபடித்தி
தழிணுண்டி டுதிமென்று தரினுண்டுன் முனம்வந்து
தவிநின்றி புரிவன்ச ததமிட்ட வேலை.

தந்திடையா யுய்வியென நாடியே. கலை. (௯௫)

(22) தரியார் கனசா தகமுற்றி டவிடுத்த
தகர்மேல் வருநா தனெனத்த மூவியுற்ற
தனியின்ப மொடுவந்தி தமுறும்பா பலசிந்தி
தபலன்பெ றவடைந்த தளகர்த்தர் காடை.

(23) தவிடார் புறவோ தமுறச்சு ரதமிச்சை
தவிரா தயர்மீ தமனைத்தும் மனதிற்பெய்
தவள்நெஞ்சு வகைகொண்டு தாமுந்தி டநிமிர்ந்து
தரல்சிந்தை யினுணர்ந்து தருணிக்கி வாணு.

(24) தலிலே வெயர்வூர் தாமுத்து லவுசுட்டி
தடுமா றிடவா தமுறத்தொ ழில்நடத்து
தனுமின்ப வெளம்வந்து தடையின்றி மடைகொண்டு
தளவந்த சுகமிஞ்சு தனியர்க்கு மேது.

தங்குலகோர் சொல்லவெளி தாகுமோ. கலை. (௧)

முற்றிற்று.

## பிழை திருத்தம்.

| | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| சிறப்புப்பாயிரம். | 3 | 26 | யா | பா |
| சாற்றுக்கவிகள். | 3 | 23 | பான்றேன் | பால்தேன் |
| ... | 4 | 16 | நிமிஷக்கவி | நிமிஷகவி |
| அந்தாதி. | 11 | 4 | அக்காரக்காரக் | அக்காரக் |
| ... | 12 | 12 | அலங்கல்லணி | அலங்கலணி |
| ... | 15 | 13 | முகாநாதன் | முகப்பெருமான் |
| வண்ணம். | 2 | 17 | குறளிரந்து | குறளிறந்து |
| ... | 3 | 16 | மருங்கி | மழுங்கு |
| ... | ... | 17 | தணுளச்சு | தனுளச்சு |
| ... | ... | 22 | யம்பிதயம் | யம்பிதயம |
| ... | 4 | 4 | தந்திடுதார் | தந்தருதார் |



# அச்சிடவேண்டிய புத்தகங்கள்.

வேம்பத்தூர்ச் சங்கவித்துவான்களிலொருவரும், இந்நூலாசிரியரின்
பிதாமகருமாகிய சங்கரசுப்பிரமணியக் கவிராஜ சாஸ்திரிகளால்
கொல்லம் 1022-ல் திருவநந்தபுரத்தில் அரசாட்சிபுரிந்த
குலசேகரப்பெருமான் என்னும் நாமகரணமுள்ள
மஹாராஜா அவர்களனுமதியின்பேரிற் பாடப்பெற்ற

1. திருவநந்தபுரம் பத்பநாபர் பேரிற் பிள்ளைத்தமிழ்.
2. ௸ பத்பநாபர் பேரில் மகார வண்ணம்.
3. ௸ தலவிலாசம்.

௸ யார் குமாரராகிய சாமாவையரென்ற ஆண்டி ஐயரவர்களால்
கொல்லம் 1048-ல் திருவநந்தபுரத்தில் ஆட்சிபுரிந்த ஆயில்ய
மஹாராஜாவென்னும்வஞ்சிபூபால மார்த்தாண்ட ராமவர்ம
குலசேகர மஹாராஜா அவர்கள் அனுமதியின் பேரிற் பாடப்பெற்ற

4. கங்கா விலாசம்.

௸ யார் குமாரரும் இந்நூலாசிரியருமாகிய சௌந்தர பாரதி
அவர்களால் இயற்றப்பெற்ற

5. பதிகமஞ்சரி.